செ.வெ.எண்:-63/2020 நாள்:26.04.2020

**திண்டுக்கல் மாவட்டம்**

# தமிழ்நாடு தூய்மை பணிபுரிவோர் நலவாரிய அடையாள அட்டை வைத்திருப்போர் தற்போது பணிபுரிந்தாலும் அல்லது ஓய்வு பெற்று இருந்தாலும் கொரோனா நிவாரண தொகை ரூ.1000 வழங்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக்கழகத்தின் (தாட்கோ) கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தூய்மை பணிபுரிவோர் நலவாரியம் மூலமாக கடந்த 2008-ஆம் ஆண்டில் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்த தூய்மை பணியாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. இந்த தூய்மைப் பணிபுரிவோர் நலவாரிய அடையாள அட்டையை வைத்துள்ள பணியாளர்கள் தற்போது பணிபுரிந்தாலும் அல்லது ஓய்வு பெற்று இருந்தாலும் கொரோனா நிவாரண உதவி தொகை ரூ.1000 பெறலாம்.

இந்த நிவாரண உதவித் தொகையினை பெறுவதற்கு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் தற்போது பணிபுரிபவர்கள் சம்பந்தப்பட்ட அலுவலகம் மூலமாகவும், ஓய்வு பெற்றவர்கள் திண்டுக்கல் தாட்கோ மாவட்ட மேலாளரை dmdngtahdco@yahoo.com என்ற மின்னஞ்சல் மற்றும் 9445029460, 9944615591 ஆகிய வாட்ஸ்அப் எண்களில் தொடர்புகொண்டு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நலவாரிய அடையாள அட்டையின் புகைப்படத்தினை அனுப்பி வைக்கலாம்.

மேலும், மேற்காணும் கைப்பேசி எண்களில் தொடர்பு கொண்டு விவரங்களை உடனடியாக தெரிவித்து, பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---